திரு. என். மருதாசலம் : சூப்பர் மார்க்கெட்டிலே வெளியிலே விற்கப் படுகின்ற விலையைவிட அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. அங்கே குறைந்த விலைக்கு விற்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படிப் பொதுவான குற்றச் சாட்டைச் சொல்லக் கூடாது. சூப்பர் மார்க்கெட்டுகளிலே, சிறப்பு அங்காடி களிலே குறைந்த விலையிலே விற்கப்படுவதால்தான் மக்கள் நம்பி அதை ஊக்குவிக்கிறார்கள். ஏதாவது ஒரு சில பொருள்களின் விலை ஏறியிருக்குமானால் அதைக் குறைக்க முயற்சிக்கலாம். சிறப்பு அங்காடிகள் சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதுதான் மக்களுடைய நம்பிக்கை.

*Key Village Scheme.*

***485 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :**

**(a) whether there is any proposal under the consideration of the Government to revive the Key Village Scheme ; and**

**(b) if so, the details thereof ?**

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : (அ) ஆம்.

(இ) 1973-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் பழனி வட்டத்தில் கேந்திர கிராம நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1974–75 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 8 கேந்திர கிராம நிலையங்களை ஏற்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது. 1975-76 ஆம் ஆண்டில் 8 கேந்திர கிராம நிலையங்களை ஏற்படுத்த நிதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், கீ வில்லேஜ் திட்டத்தில் ஏற்கனவே இருந்த திட்டப்படி அமல் நடத்தப்படவில்லை. இப்போது அப்படிப்பட்ட திட்டம் இல்லாமல் செமிநேஷன் மட்டுந்தான் இருக்கிறது. பழையபடியும் அந்தத் திட்டத்தை கொண்டுவந்து பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : ரீ-ஆர்கனைஸ் செய்யும்போது புதிதாக இந்தத் திட்டத்தை 40 இடங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. முதல் கட்டமாக மதுரை மாவட்டத்திலே 3 இடங்களிலே ஏற்படுத்தினோம். திருநெல்வேலி மாவட்டத்திலே 8 இடங்களில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மேலும் 8 இடங்களுக்கு விஸ்தரிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. மீண்டும் 40 இடங்களில் இதை விஸ்தரித்து மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலிக்கலாம்.

THIRU B. VENKATASWAMY: After the closure of Key Village Scheme, most of the important things that were done under the scheme had been stopped. May I know whether the Government will seriously consider implementing the Key Village Scheme as originally envisaged ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : இருந்த இந்தக் கால்நடை டிஸ்பன்சரிகள் மூடப்பட்டுவிட்டனவாகச் சொல்வது சரியான கூற்றல்ல. ரீ-ஆர்கனைஸ் செய்தபோது ஒரே இடத்திலே அடர்த்தியாக நெருக்கமாக இருந்தவையெல்லாம் மாநில அளவிலே பரவலாக நிறைந்து இருக்கவேண்டுமென்ற முறையிலேதான் செய்யப்பட்டது. அதன் காரணமாகச் சில இடங்களிலே மூடப்பட்டன. அதையொட்டிப் பல இடங்களில் புதிதாகவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே எட்டு இடங்கள் என்று சொன்னார்கள். எந்த எந்த இடங்கள் என்று சொல்ல முடியுமா ? இப்போது பழைய கீ வில்லேஜ் ஸ்கீமே வருமா ? அல்லது—கீ வில்லேஜ் டிஸ்பன்சரியல்ல—தனியாக உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எட்டு இடங்கள் எந்த எந்த இடங்கள் என்பதுபற்றி விரைவிலே முடிவு செய்யப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை மாவட்டம் கால்நடைகள் நிறைந்த மாவட்டம் ஆகும். ஆகவே இந்தச் சிறப்பான திட்டத்தைத் தஞ்சை மாவட்டத்திற்கும் விஸ்தரிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஐ.சி.டி.பி. ஸ்கீம் மூலமாகத் தீவிரக் கால்நடைத் திட்டத்தின் மூலமாகத் தஞ்சை மாவட்டத்திலே மேற்கொண்டு 100 இடங்களில் சென்டர்கள் எடுத்த 1975-76-ம் ஆண்டில் செயற் குறிப்பு உள்ளது.

### தஞ்சை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டம்.

*486 வினு—திரு. என. கிட்டப்பா : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்தில், கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை எத்தனை சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன ?

(இ) அவைகளின் மூலம் எத்தனை உறுப்பினர்கள் பண்ணைகள் அமைத்துள்ளனர் ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : (அ) தஞ்சை மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மொத்தம் 21 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன